**செய்தி வெளியீடு எண் : 1872** **நாள் : 27.10.2022**

**சென்னை – வால்டாக்ஸ் சாலையில், மழைநீர் கால்வாய் கட்டுமான பணி குறித்து இன்று (27.10.2022) நாளிட்ட நாளிதழில் செய்தி வெளியீடு தொடர்பாக – உண்மை நிலவரம்.**

எதிர்வரும் மழைக் காலத்தை முன்னிட்டு, மழைநீர் எளிதாக வெளியேறும் வகையில், மழைநீர் வடிகால்வாய்ப் பணிகள் போர்க்கால அடிப்படையில் நெடுஞ்சாலைத்துறை மூலம் நடைபெற்று வருகிறது. பகல் நேரத்தில் இப்பணிகளை மேற்கொண்டால், போக்குவரத்துக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதால் இரவு 10 மணிக்குமேல் இப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் இரவு நேரங்களில் இப்பணிகளை ஆய்வு செய்தது செய்தித்தாள்களில் வெளிவந்துள்ளது.

இந்நிலையில் இன்று (27.10.2022) நாளிதழில் பல நாட்களுக்கு முன்னர் எடுக்கப்பட்டப் படத்தை வெளியிட்டு மழைநீர் வடிகால்வாய்ப் பணிகள் முடிக்கப்படாததைப்போலவும், வாகன ஓட்டிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று செய்தி வெளியிட்டுள்ளது.

நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களும், பணியாளர்களும் இரவு–பகல் பாராமல் மழைநீர் வடிகால்வாய்ப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். தற்போது, வால்டாக்ஸ் சாலையில் நாளிதழில் குறிப்பிட்ட மழைநீர் வடிகால்வாய்ப் பணிகள் முன்னரே நிறைவடைந்து விட்டது. அவற்றின் தற்போதைய புகைப்படத்தை வெளியிட்டு பொது மக்களுக்கு உண்மை நிலவரத்தை தெரிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வால்டாக்ஸ் சாலையில் மேலும், பல்வேறு இடங்களில் நடைபெற்று வரும் பணிகள் ஒவ்வொன்றாக முடிவுபெற்று வருகிறது என்றும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in